மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 37/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, மற்றும் 3 பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1982) நிறைவேற்றப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(இ) வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு வட்டிக்கு கடன் கொடுப் பவர்கள் (திருத்த) சட்டமுன்வடிவு (*) (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 38/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

திரு. அ. ரகுமான்கான்: அடுத்த சட்ட முன்வடிவும் இதே போன்ற சட்ட முன்வடிவு தான். அதையும் சேர்த்து ஒன்றாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம்.

---

*1982, செப்டம்பர் 6-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS